உ

திருச்சிற்றம்பலம்.

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும்
சிதம்பரம்
இராமலிங்கப்பிள்ளை அவர்கள்
திருவாய்மலர்ந்தருளிய

அருட்பா மாலை.

இஃது.
சிதம்பரம்.
பு. வே. சுந்தரம்பிள்ளை கேட்டுக்கொண்டபடி.

இவை.
சரவணபுரம்.
சண்முகமுதலியாரவர்களால்
பார்வையிடப்பட்டு.

புரசபாக்கம்.
ஏழுமலைப்பிள்ளையவர்களது
விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1890

இரண்டாம் புத்தகம்.

உ

திருச்சிற்றம்பலம்.

நடராஜர்பேரில்

திருவருட்பிரகாசவள்ளலார்

திருவாய்மலர்ந்தருளிய

அருட்பா மாலை.

அருள்விளக்கே யருட்சுடரே யருட்சோதிச் சிவமே
யருளமுதே யருநிறைவே யருள்வடிவப் பொருளே, இரு
ள் கடிந்தென் னுள முழுது மிடங்கொண்ட பதியே என்
னறிவே யென் னுயிரே யெனக்கினிய வுறவே மருள்கடி
ந்த மாமணியே மாற்றறியாப் பொன்னே, மன்றில்நடம்
புரிகின்ற மணவாளா வெனக்கே தெருளளித்த திருவா
ளா ஞானவுருவாளா, தெய்வநடத்தரசே நான் செய்மொ
ழியேற்றருளே. (௧)

கோடையிலே யிளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடை
த்த குளிர் தருவே தருநிழலே நிழற்கனிந்த கனியே, ஓ
டையிலே யூறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே யுகந்த தண்
ணீரிடை மலர்ந்த சுகந்த மணமலரே மேடையிலே வீசுகி
ன்ற மெல்லிய பூங்காற்றே, மென்காற்றில் விளைசுகமே
சுகத்திலுறும் பயனே ஆடையிலே யெனை மணந்த மண
வாளா, பொதுவிலாடுகின்ற வரசே யென்னலங்களணிந்
தருளே. (௨)

இன்புற நானெய்ப்பிடித்தே பெற்ற பெருவைப்பே
ஏங்கியபோதென்றன்னைத் தாங்கிய நற்றுணையே, அன்

புறவென்னுட்கலந்தேயண்ணிக்குமமுதே யச்சமெலா
ந்தவிர்த்தென்னையாட்கொண்டகுருவே, என்பருவங்கு
றியாதேயெனைமணந்தபதியே யிச்சையுற்றபடியெலா
மெனக்கருளுந்துரையே, அன்புறமெய் யன்பருக்கே
பொதுநடஞ்செய்யரசே தூயதிருவடிகளுக்கென்சொ
ல்லுமணிந்தருளே. (௩)

ஒசித்தகொடியனையேற்குக்கிடைத்த பெரும்பற்றே
யுண்மயங்கும்போது மயக்கொழித் தருளுந்தெளிவே,
பசித்தபொழுதெதிர்கிடைத்தபாற் சோற்றுத்திரளே
பயந்தபொழுதெல்லாமென் பயந்தவிர்த்த துரையே, ந
சித்தவரையெழுப்பியரு ணல்கியமாமருந்தே நான்புண
ரநானுகி நண்ணியமெய்ச்சிவமே, கசித்தமனத்தன்பர்
தொழப்பொதுநடஞ்செய்யரசே களித்தெனது சொ
ன்மாலைகழலிலணிந்தருளே. (௪)

மனமிளைத்துவாடியபோதென் னெதிரேகிடைத்து
வாட்டமெலாந்தவிர்த்தெனக்குவாழ்வளித்தநிதியே, சி
னமுகத்தார்தமைக்கண்டுதிகைத்தபொழுதவரைச் சிரி
த்தமுகத்தவராக்கி யெனைக்களித்தசிவமே, அனமுகை
த்தானரிமுதலோர் துருவிநிற்கவெனக்கே வடிமுடிகள்
காட்டுவித்தேயடிமைகொண்டபதியே, இனமெனப்பே
ரன்பர்தொழப்பொதுநடஞ்செய்யரசே யென்னுடை
யசொன்மாலையாவுமணிந்தருளே. (௫)

கங்குலிலேவருந்தியவென் வருத்தமெலாந்தவிர்த்தே
காலையிலேயென்னுளத்தே கிடைத்தபெருங்களிப்பே,

செங்குவளைமாலையொடுமல்லிகைப்பூமாலை சேர்த்தணி
ந்தென்றனைமணந்ததெய்வமணவாளா, எங்குமொளிம
யமாகிநின்றநிலைகாட்டியென் னகத்தும்புறத்தும்நிறை
ந்திலங்கியமெய்ப்பொருளே துங்கமுறத்திருப்பொது
வித்திருநடஞ்செய்யரசே, சொன்மாலைசூடுகின்றேன்
றோளிலணிந்தருளே. (௬)

கரைந்துவிடாதென்னுடையநாவகத்தேயிருந்து கன
த்தசுவைதருகின்ற கற்கண்டேகனிவாய், விரைந்துவந்
தென்றுன்பமெலாந்தவிர்த்தவருளமுதே மெய்யருளே
மெய்யாகிவிளங்குகின்றவிளக்கே, திரைந்தவுடல்விரை
ந்துடனே பொன்னுடம்பேயாகித் திகழ்ந்தழியாதோ
ங்கவருள்சித்தேமெய்ச்சத்தே வரைந்தென்னை மணம்
புரிந்துபொதுநடஞ்செய்யரசே, மகிழ்வொடுநான்புனை
ந்திடுஞ்சொன்மாலையணிந்தருளே. (௭)

கதிக்குவழிகாட்டுகின்றகண்ணேயென்கண்ணிற் க
லந்தமணியேமணியிற்கலந்தகதிரொளியே, விதிக்குமு
லகுயிர்க்குயிராய் விளங்குகின்ற சிவமே மெய்யுணர்ந்
தோரகத்தே விளங்கியதீங்கனியே, மதிக்குமதிக்
கப்புறம்போய்வயங்குதனிநிலையே மறைமுடியாகமமு
டிமேல்வயங்குமின்பநிறைவே, துதிக்குமன்பர்தொழ
ப்பொதுவில்நடம்புரியுமரசே சொன்மாலை சூட்டுகின்
றேன்றோளிலணிந்தருளே. (௮)

தன்பெருமைதானறியாத் தன்மயனேயெனது தனி
த்தலைவாவென்னுயிர்க்குளினித்ததனிச்சுவையே, நின்

பெருமைநானறியேநான்மட்டோவறியேன் நெடுமால்
நான்முகன்முதலாமூர்த்திகளுமறியார், அன்புறுமாகம
மறைகளறியாரேயெனினும் அவருமவைகளுஞ் சில
சொல்லணிகின்றார்நினக்கே, என்பருவங்குறியாதே எ
னையாண்டவரசே யானுமவர்போலணிகின்றே னணிந்
திடுந்தருளே. (௯)

உண்ணவுண்ணத்தெவிட்டாதே தித்தித்தென்னுடம்
போடுயிருணர்வுங்கலந்துகலந்துள்ளத்தும்புறத்தும்
தண்ணியவண்ணம் பரவப்பொங்கிநிறைந்தாங்கே தது
ம்பியென்றன்மயமெல்லாந்தன்மயமாக்கி எண்ணியவெ
ன்னெண்ணமெலா மெய்தவொளிவழங்கி யிலங்குகின்
றபேரருளா மின்னமுதத்திரளே, புண்ணியமேயென்
பெரிய பொருளேயென்னரசேபுன்மொழியென் றிக
ழாதேபுனைந்துமகிழ்ந்தருளே. (௰)

நாட்டார்கள்சூழ்ந்து மதித்திடமணிமேடையிலே ந
டுவிருக்க வென்றனையேநாட்டியபேரிறைவா, பாட்டா
ளர்பாடுதொறும் பரிசளிக்குந்துறையே பண்ணுமறை
ப்பாட்டேமெய்ப் பாட்டினதுபயனே, கூட்டாளாசிவ
காமக்கொடிக்கிசைந்த கொழுநகோவேயென்கணவா
வென்குரவாவெண்குணவா, நீட்டாளர்புகழ்ந்தேத்த ம
ணிமன்றில்நடிக்கும் நீதிநடத்தரசேயென்னெடுமொழி
கொண்டருளே. (௧௧)

கைக்கிசைந்தபொருளே யென்கருத்துக்கிசைந்த க
னிவேகண்ணேயென்கண்களுக்கே கலந்திசைந்த கண
வா, மெய்க்கிசைந்தவணியேபொன்மேடையிலென்னு

டனேமெய்கலந்தருணத்தேவிளைந்தபெருஞ்சுகமே,நெ
ய்க்கிசைந்தவுணவேயென்னெறிக்கிசைந்தநிலையேநித்தி
யமேயெல்லாமாஞ் சத்தியமேயுலகில், பொய்க்கிசைந்
தார்காணாதேபொதுநடஞ்செய்யரசே புன்மொழியெ
ன்றிகழாதேபுனைந்துமகிழ்ந்தருளே. (கஉ)

நான்பசித்தபோதெல்லாந்தான்பசித்ததாகி நல்லுண
வுகொடுத்தென்னைச் செல்வமுறவளர்த்தே, ஊன்பசித்
தவிளைப்பொன்றுந் தோற்றாதவகையேவொள்ளியதெ
ள்ளமுதெனக்கிங் குவந்தளித்தவொளியே, வான்பதிக்
குநெடுமாற்கு நான்முகற்குமரிதாம் வாழ்வெனக்கே
யாகியுற வரமளித்தபதியே, தேன்பரித்தமலர்மணமே
திருப்பொதுவில் ஞானத்திருநடனஞ் செய்யரசேயெ
ன்சிறுமொழியேற்றருளே (கங)

கையாததீங்கனியே கயக்காதவமுதே கரையாதகற்க
ண்டேபுரையாதகரும்பே, பொய்யாதபெருவாழ்வேபு
கையாதகனலே போகாதபுனலேயுள் வேகாதகாலே,
கொய்யாதநறுமலரே கோவாதமணியேகுளியாதபெரு
முத்தேவொளியாதவெளியே, செய்யாதபேருதவிசெ
ய்தபெருந்தகையே தெய்வநடத்தரசேயென்சிறுமொ
ழியேற்றருளே. (கச)

கொடுத்திடநா னெடுத்திடவுங் குறையாத நிதியே
கொல்லாதநெறியே சித்தெல்லாஞ்செய்பதியே, மடுத்
திடவுமடுத்தடுத்தே மடுப்பதற்குள்ளாசைவைப்பதன்
றிவெறுப்பறியாவண்ணநிறையமுதே, எடுத்தெடுத்து
ப்புகன்றாலுமுலவாதவொளியே என்னுயிரோ யென்னு

யிருக்கிசைந்தபெருந்துணையே,தடுத்திடவல்லவரில்லாத்தனிமுதற்பேரரசே தாழ்மொழியென்றிகழாதே தரித்துமகிழ்ந்தருளே. (கரு)

தனித்தனிமுக்கனிபிழிந்து வடித்தொன்றாய்க்கூட்டிச் சர்க்கரையுங்கற்கண்டின்பொடியுமிகக்கலந்தே, தனித்தநறுந்தேன்பெய்து பசும்பாலுள் தேங்கின்றனிப்பாலுஞ்சேர்த்தொருதீம் பருப்பிடியும்விரவி, இனித்தநறுநெய்யளைந்தே யிளஞ்சூட்டினிறக்கியெடுத்த சுவைக்கட்டியினுமினித்திடுந்தெள்ளமுதே, அணித்தடறத்திருப்பொதுவில் விளங்குநடத்தரசே யடிமலர்க்கென் சொல்லணியாவுமலங்கணிந்தருளே. (கசு)

மலைவறியாப்பெருஞ்சோதி வச்சிரமாமலையேமாணிக்கமணிப்பொருப்பேமரகதப்போர்வையே, விலையறியாவுயராணிப்பெருமுத்துத்திரளே விண்ணவருங்கண்ணருமோர்மெய்ப்பொருளின்விளைவே, கொலையறியாக்குணத்தோர்தங்கூட்டுறவேயருட்செங்கோல் நடத்துகின்றதனிக்கோவேமெய்யறிவால்,நிலையறிந்தோர்போற்றுமணிமன்றிநடத்தரசே நின்னடிப்பொன் மலர்களுக் கென்னெடுஞ்சொலணிந்தருளே. (கஎ)

கண்களிக்கப்புகைசிறிதுங் காட்டாதேபுருவக்கலைநடுவே விளங்குகின்றகற்பூரவிளக்கே, பண்களிக்கப்பாடுகின்றபாட்டில்விளைசுகமே பத்தருளேதித்திக்கப் பழுத்ததனிப்பழமே, மண்களிக்கவான்களிக்க மணந்தசிவகாமவல்லியென் மறைகளெலாம்வாழ்த்துகின்ற வாம

ப்பெண்களிக்கப்பொதுநடஞ்செய்நடத்தரசே நினது பெரும்புகழ்ச்சேவடிகளுக்கென்னரும்புமணிந்தருளே

உருவெளியேயுருவெளிக்குள்ளுற்றவெளியுருவேயுருநடுவும்வெளிநடுவுமொன்றானவொன்றே, பெருவெளியேபெருவெளியிற் பெருஞ்சோதிமயமே பெருஞ்சோதிமயநடுவேபிறங்குதனிப்பொருளே, மருவொழியாமலரகத்தே வயங்குமொளிமணியேமந்திரமேதந்திரமேமதிப்பரியாமருந்தே, திருவொழியாதோங்குமணிமன்றிநடத்தரசேசிறுமொழியென்றிகழாதேசேர்த்துமகிழ்ந்தருளே. (௧௯)

கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுங்களிப்பே காணார்க்குங்கண்டவர்க்குங்கண்ணளிக்குங்கண்ணே, வல்லார்க்கும்மாட்டார்க்கும்வரமளிக்கும்வரமே மதியார்க்குமதிப்பவர்க்குமதிகொடுக்குமதியே, நல்லோர்க்கும்பொல்லார்க்குமநடுநின்றநடுவே நரர்களுக்குஞ்சுரர்களுக்குநலங்கொடுக்குநலமே, எல்லார்க்கும்பொதுவில்நடமிடுகின்றசிவமே யென்னரசேயான்புகலுமிசையுமணிந்தருளே. (௨௰)

எண்ணாதமந்திரமேயெழுதாதமறையே யேறாதமேனிலைநின்றிறங்காதநிறையே, பண்ணாதபூசையிலேபடியாதபடிப்பே பாராதபார்வையிலேபதியாதபதிப்பே, நண்ணாதமனத்தகத்தேயண்ணாதநலமே நாடாதநாட்டகத்தேநடவாதநட்பே, அண்ணாவென்னப்பாவென்னையாவென்னரசேயடியிணைக்கென்சொன் மாலையணிந்துமகிழ்ந்தருளே. (௨௧)

திருச்சிற்றம்பலம்.